"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

# தமிழ்மொழி ஆண்டு 9

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

# பகுதி – 1

## 1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3

1. பண்டைத் தமிழரின் கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்குவது
   1. சித்தன்னவாசல்
   2. தஞ்சைப்பெருங்கோயில்
   3. மாமல்லபுரம்

2. குமரிக்கண்டத்திலிருந்த தென்மதுரையில் தமிழ் வளர்க்கத் தோற்றுவிக்கப்பெற்ற சங்கம்
   1. கடைச்சங்கம்
   2. இடைச்சங்கம்
   3. தலைச்சங்கம்

3. உயிர்மெய் நெட்டெழுத்துகளின் எண்ணிக்கை
   1. இருநூற்றுப்பதினாறு
   2. தொண்ணூறு
   3. நூற்றிருபத்தாறு

4. பாங்கனுக்கு பாங்கி போல உழவனுக்கு
   1. உழத்தி
   2. உழவி
   3. உழவள்

5. ‘நல்லாரைக் காண்பதுவும் நன்றே…’ என்றார் ஔவையார். நல்லார் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. அன்பர்
   2. செல்வர்
   3. தீயார்

6. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்பெறுவது
   1. வெள்ளிவிழா
   2. மணிவிழா
   3. பொன்விழா

7. ஈழவன் ஊண்உறக்கமின்றி உழைத்து உயர்வு பெற்றான். இதில் ஊண்உறக்கம் என்பது
   1. அடுக்குமொழி
   2. இணைமொழி
   3. இரட்டைக்கிளவி

8. நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டுமக்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டும். இவ்வாக்கியம்
   1. கலப்புவாக்கியம்
   2. தனிவாக்கியம்
   3. தொடர்வாக்கியம்

9. யானை பிளிறும் அதுபோல பசு
   1. கர்ச்சிக்கும்
   2. உறுமும்
   3. கதறும்

10. பண்டைக்காலத்தமிழரின் சிறப்பான இசைக்கருவியாக விளங்கியது
    1. யாழ்
    2. வயலின்
    3. ஆர்மோனியம்

1 2 3

11. இருதிணைப் பொதுப்பெயராக அமைவது
   1. அரசன்
   2. பேதை
   3. தாய்

12. சிறுமி பட்டுச்சட்டை அணிந்து வந்தாள். இதில் வன்றொடர்க் குற்றியலுகரம் பெற்றுவந்த சொல்
   1. பட்டு
   2. சிறுமி
   3. அணிந்து

13. படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் அல்லாதது
   1. அவர்கள்
   2. நாங்கள்
   3. அவை

14. சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதியவர்
   1. பரிமேலழகர்
   2. அடியார்க்கு நல்லார்
   3. ஆறுமுகநாவலர்

15. எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது. இதில் எளிது என்பது
   1. கடினம்
   2. இலகு
   3. விரைவு

16. ஈழத்தில் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள்
   1. பாண்டியர்
   2. சேரர்
   3. சோழர்

17. எழிலன் சுற்றுலாச் செல்வதற்காக முதல் நாளே அடுக்குப்பண்ணினான். அடுக்குப்பண்ணுதல் என்னும் மரபுத்தொடர் குறிப்பது
   1. ஆயத்தம் செய்தல்
   2. ஓய்வு எடுத்தல்
   3. கற்பனை செய்தல்

18. ஆர், அர், கள் விகுதி பெற்று வருவது
   1. உயர்திணை பெண்பால் பெயர்
   2. உயர்திணை ஆண்பால் பெயர்
   3. உயர்திணை பலர்பால் வினைமுற்று

19. ஈழத்தில் தமிழ்ச் சிற்றரசுகள் பல இருந்தன. சிற்றரசு என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. பேரரசு
   2. சிறிய அரசு
   3. பேரூர்

20. மெல்லினமெய்யெழுத்துத் தொகுதி
   1. க் ச் ட் த் ப் ற்
   2. ய் ர் ல் வ் ள் ழ்
   3. ங் ஞ் ண் ந் ம் ன்

**1 2 3**

21. வண்ணமயில் அழகியதோகையை விரித்தாடியது. இதில் எழுவாய் அடை
    1. அழகிய
    2. வண்ணம்
    3. விரித்து

22. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்பழமொழி உணர்த்தும் பொருள்
    1. பொறுமை
    2. நன்றி
    3. ஒற்றுமை

23. பேச்சுப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுள் நிலவனின் பேச்சே நனிசிறந்தது. இதில் வந்துள்ள உரிச்சொல்
    1. ஏ
    2. உள்
    3. நனி

24. பண்புத்தற்கிழமை பெற்றுவந்த தொடர்
    1. அரசனது கோபம்
    2. அரசனது கை
    3. அரசனது படை

25. காடும் காடுசார்ந்த நிலத்தைக் குறிப்பது
    1. முல்லை
    2. குறிஞ்சி
    3. மருதம்

26. 'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்…' இப்பாடலடியில் மெய் என்பது
    1. உண்மை
    2. அருமை
    3. உடம்பு

27. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன
    1. நாற்பொருள்
    2. நாற்படை
    3. நாற்குணம்

28. மாரி பொழிந்ததால் நாட்டுமக்கள் நலம் பெற்றனர். இதில் மாரி என்பது
    1. இடவாகுபெயர்
    2. காலவாகுபெயர்
    3. பொருளாகுபெயர்

29. குடிமக்கள்காப்பியம் எனப் போற்றப்பெறுவது
    1. புறநானூறு
    2. குண்டலகேசி
    3. சிலப்பதிகாரம்

30. நாம் இளமைப்பருவத்திலிருந்தே விழுமியப்பண்புகளைக் கடைப்பிடித்து வருதல் வேண்டும். இளமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. பழைமை
    2. முதுமை
    3. எளிமை

(30×1=30 புள்ளிகள்)

**2. சேர்த்தெழுதுக.**

1. தூரம் + தேசம் = ____________________
2. பொன் + தோடு = ____________________
3. தண்மை + நீர் = ____________________
4. பத்து + பாட்டு = ____________________
5. நீர் + ஊற்று = ____________________
6. கை + அளிப்பு = ____________________
7. பூ + பனி = ____________________
8. மண் + குடம் = ____________________

(8×1=8 புள்ளிகள்)

**3. பிரித்தெழுதுக.**

1. காரிருள் = ______________ + ______________
2. மெய்யறிவு = ______________ + ______________
3. வாழ்த்துரை = ______________ + ______________
4. மேற்றிசை = ______________ + ______________
5. பொருளாதாரம் = ______________ + ______________
6. மரஞ்செடி = ______________ + ______________
7. கன்மனம் = ______________ + ______________
8. மூவேந்தர் = ______________ + ______________

(8×1=8 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. நட்பு  2. உழைப்பு

________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________



(4 புள்ளிகள்)

**5. திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| துணிக | அடங்காமை | துணிந்தபின் |
| அமரருள் | இழுக்கு | உய்த்து |

1. அடக்கம் ____________________ உய்க்கும் ____________________

   ஆரிருள் ____________________ விடும்.

2. எண்ணித் ____________________ கருமம் ____________________

   எண்ணுவம் என்பது ____________________

(6×½=3 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. யாழ்ப்பாண அரசின் தலைநகரம் எது? (1 புள்ளி)

   ________________________________________

2. தமிழ் இசைக்கருவிகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக. (2 புள்ளிகள்)

   ________________________________________

   ________________________________________

   ________________________________________

   ________________________________________

3. புறப்பாட்டில் கூறப்பெற்றிருக்கும் வெளிவாழ்வியல் பற்றிய செய்திகள் எவை? (2 புள்ளிகள்)

   ________________________________________

   ________________________________________

   ________________________________________

4. சொற்புணர்ச்சி என்றால் என்ன? உயிர்முன் உயிர் புணரும் போது தோன்றும் உடம்படுமெய்யெழுத்துகள் எவை? (2 புள்ளிகள்)

5. விருப்பு வாக்கியம் என்றால் என்ன? அவற்றின் வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக. (2 புள்ளிகள்)

6. வேற்றுமை என்றால் என்ன? எட்டாம் வேற்றுமையை வேறு எவ்வாறு அழைப்பர்? எடுத்துக்காட்டு இரண்டு தருக. (1½ புள்ளிகள்)

7. பகுபதம், பகாப்பதம் என்றால் என்ன? பகுபத உறுப்புகள் எவை? (1½ புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் மின்னிறத்து
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? (1 புள்ளி)

2. தயமந்தி நடந்து வருதலைப் புலவர் எதற்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளார்? (1 புள்ளி)

3. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

1. சினைப்பெயர் ____________________
2. பண்புப்பெயர் ____________________
3. பெயரெச்சம் ____________________
4. எதுகை ____________________

(4×½= 2 புள்ளி)

4. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக. (2 புள்ளி)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. கல்வியின் சிறப்பு
2. இன்கலைகள்
3. நவீன தொடர்பாடல்களும் இளம் தலைமுறையினரும்

(9 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் பந்தியைப் படித்து மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

உலகம் இனிது இயங்குவதற்கும் மக்கள் உயர் நலமுறுவதற்கும் குறிக்கோள்கள் கருவியாகின்றன. குறிக்கோள்கள் பழைமையிற் பழைமையும் புதுமையிற் புதுமையும் பெற்று நிலைபேறடைந்து திகழ்கின்றன. முன்னோரும் குறிக்கோளால் ஈடேறினர். குறிக்கோளே நம் பின்னோரையும் உயர்வடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. குறிக்கோள்கள் பல்வேறு வகையின. பல்வேறு இயல்பமைந்த குறிக்கோள்களைத் தத்தம் இயல்புக்கிணங்க கடைப்பிடித்தொழுகும், ஒழுகமுயலும் தனிமனிதர் பலர் தம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு அடித்தளமாகின்றது. வள்ளுவப் பெருந்தகையாரும் தனிமனிதனை நிலைக்களனாகக் கொண்டே நல்லறங்களை வகுத்துத் தந்த பெருமையை நாம் அறிவோம். தனிமனிதனிடத்து குறிக்கோள் அமையாதாயின் குறிக்கோள் அமைந்ததொரு சமூகத்தை உலகில் உருவாக்க முடியாது.

(4 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நிலஅமைப்பைத் தொல்காப்பியம் ஐந்தாகப் பகுக்கிறது. அவையாவன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். ஒவ்வொரு நிலப்பகுதியின் அமைப்பிற்கும் மக்களின் வாழ்க்கை முறைக்குமான உறவு குறித்தும் பழந்தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. இவற்றுள் பாலை, குறிஞ்சியும் முல்லையும் வேனிற்காலத்தில் திரிந்த நிலமாகும். குறிஞ்சியில் வாழ்ந்த குறவர்கள் தேன், கிழங்கு முதலினவற்றை உண்டும் தினை, நெல் முதலியவற்றை உற்பத்தி செய்தும் வாழ்ந்தனர். முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் கால்நடை வளர்ப்பதிலும் சிறுதானிய உற்பத்தியிலும் ஈடுபட்டனர். மருதநிலத்தில் வாழ்ந்த உழவர்கள் செழிப்பான நீர் வளத்தால் நெல் விளைச்சலில் ஈடுபட்டனர். நிலைத்த செழிப்பான வாழ்வு இங்கு ஏற்பட்டது. நாகரிக வளர்ச்சியும் கலை முதலிய ஆக்கங்களும் இப்பகுதியில் சிறப்புற்றன. நெய்தல் நிலப்பகுதியில் வாழ்ந்த பரதர்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்றவற்றைத் தமது தொழிலாகக் கொண்டனர். கொற்கை, காவிரிப்பூம்பட்டணம், வஞ்சி, முசிறி போன்ற நகரங்கள் கடல் வாணிபத்தில் தலைசிறந்து விளங்கின. குறிஞ்சியும் முல்லையும் வறண்டு பாலையாக மாறிய நிலத்தில் எயினர் வாழ்ந்தனர். இங்கு வரட்சி காரணமாக பயிர்கள் செய்யமுடியாத காரணத்தால் இங்கு வாழ்ந்தவர்கள் வழிப்பறிக் கொள்ளைத் தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தினர். மனிதரின் வளத்தை நில அமைப்பும், பருவகால மாற்றங்களுமே தீர்மானிக்கின்றன.

1. குறிஞ்சி நில மக்களின் உணவு யாது?

_______________________________________________

2. பாலை நிலம் எவ்வாறு உருவானது?

_______________________________________________

3. எயினர்களின் தொழில் யாது?

_______________________________________________

4. கடல் வாணிபத்தில் தலைசிறந்து விளங்கிய நகரங்கள் எவை?

_______________________________________________

5. முல்லை நில மக்களை எவ்வாறு அழைத்தனர்?

_______________________________________________

6. மனிதர்களின் வளத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

_______________________________________________

(6×1=6 புள்ளிகள்)

**3. பொருத்தமாக இணைக்குக.**

| | |
|---|---|
| 1. நுனிப்புல் மேய்தல் • | • நன்றி மறவாமை |
| 2. துள்ளியமாடு பொதி சுமக்கும் • | • வீண்பெருமை |
| 3. கைகொடுத்தல் • | • அறிவு உண்டாதல் |
| 4. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு • | • மேலெழுந்தவாரியாகப் படித்தல் |
| 5. கண் திறத்தல் • | • அடக்கம் இல்லாதவர் அவதியுறுவர் |
| 6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை • | • துன்பத்தில் உதவுதல் |

(6×1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியினைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

Deutsch:

Die Andamanen- und Nikobareninseln liegen mitten in der Bucht von Bengalen, die wie im Bilderbuch abgebildet sind. Die Andamanen und Nikobaren-Inseln befinden sich in einer einsamen, friedlichen und unverschmutzten Umgebung. Da hier die selteneren Meerestiere, Felsen, Wälder, Wasserfälle umgeben von Kokospalmen in Natur gibt, verbringen hunderttausende Touristen ihre Ferien. Auf diesen Inseln gibt es die folgenden Touristenattraktionen: Havelock Insel, Gross Nikobar, Tillangchong, Port Blair, Jolly Buoy, Rosser Insel, Viper Insel und Grandson Insel.

French:

Les îles Andaman et Nicobar sont situées au milieu du Golfe du Bengale. Les îles Andaman et Nicobar possèdent un environnement marin solitaire, calme et pur. En raison de la présence de créatures marines très rares, de côtes bordées de palmiers, de rochers côtiers, de forêts, de ruisseaux, chaque année, des millions de touristes choisissent ces lieux comme destination de voyage. Les destinations touristiques les plus populaires de ces îles sont l'île de Havelock, Great Nicobar, Tillangchong, Port Blair, Jolly Buoy, l'île de Ross, l'île de Viper et l'île de Grandson.

Italy :

Le isole Andamane e Nicobare sono situate nel mezzo del golfo bengala. Le isole Andamane e Nicobare possiedono un clima marino solitario, calmo e incontaminato. Ogni anno milioni di turisti a causa della presenza di creature marine molto rare, coste circondate da palme, rocce costiere, foreste, ruscelli scelgono questi luoghi come loro meta di viaggio. Le destinazioni turistiche più popolari sulle isole sono isola Havelock, Great Nicobar, Tillangchong, Port Blair, Jolly Buoy, isola Ross, isola Viper e isola Grandson.

(4 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |